*SEND IN YOUR NEWS TO*

**THE EDITOR**
**THE MORNING STAR**
NO.39, FUSSELS LANE,
COLOMBO-06.
SRI LANKA.

# THE MORNING STAR

*Registered as a News Paper at the General Post Office, Sri Lanka*

*Established 1841. A Christian Fortnightly Published Every other Friday*

**Vol. 163 - Jaffna - Friday 23 rd May 2003 No. 8**

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people*

**THE MORNING STAR RATES:**

| | |
|---|---|
| Annual Subscription-Foreign | $10.00 |
| Life Subscription Foreign | $100.00 |
| Annual Subscription Local | Rs. 100.00 |
| Life Subscription -Local | Rs.1000.00 |

**THE MORNING STAR**
NO.39, FUSSELS LANE,
COLOMBO-06.
SRI LANKA.



*Picture: Jesus, Divine Worker by: Gianni Vagnetti*

## Relief to the South by the Northerners

People of the North have taken the task of contributing to the victims affected by the recent floods in the South. This is said to be the worst floods in the past. The medias flashed the magnanimous act of the LTTE sending lorry leads of relief to the South. They have mentioned this mission as 'Friendship Bridge'. It is also believed that the LTTE political wing representatives from Kilinochchi and Vavuniya offices and the members from Mullaitevu, Mannar and Jaffna were also instrumental in this project. This act in spite of the withdrawal from the peace talks temporarily, is an act to be appreciated.

## Looking at the Biblical Characters with 'New Eyes'

Some of the Biblical characters have been interpreted in a particular way through out the ages that the real form and the idea of the writes are often concealed or distorted. The recent study of the Bible with its context, give us a clear picture of the character. One of the passages is seen in Mark 7. 24-30. This is the encounter of Jesus with the Syrophoenician woman.

The context is that Jesus has moved from Galilee into the province of Syria and is in a private house. He is approached by another unlikely person, a Gentile woman, of

Contd...Page 4

## Decline in suicide rate

Though Sri Lanka, as a shole, has the highest suicide rate in the world (Ganeswaran, Subramaniam and Mahadevan, 1984), the war produced a drop in suicide rates in Jaffna (Somasundaram and Rajadurai, 1995). Suicide rates are remarkably constant for each society but show a marked fall during war (Durkheim, 1951). Suicide rates in Jaffna have shown the same trend during the war with a marked fall during periods of intense fighting. The psychodynamic explanation describes suicide similar to depression as a form of aggression turned inwards towards the self, whereas war provides an outlet for the aggression to be turned outwards towards a common enemy (Lyons, 1979). According to our own clinical observations during the war, adolescents, in a mental state caused by intense frustration or interpersonal conflict that made them think of suicide and would have led to suicidal attempts in normal times, often said that they would rather join the militants and die in combat where at least their lives would have been honoured on posters (a common method of commemorating dead combatants in Jaffna).

*(Daya Somasundaram. ~~Curtsey~~ Courtesy: The International Journal of Mental Health, Psychosocial Work and Counsellin in areas of Armed Conflict).*

## New Appointment as the Junior Vice Principal

Mrs. Indranee Jeyakumaran has been appointed as the Junior Vice Principal of Jaffna College, by the Jaffna College Board. She will assume duties from the 1st of June. She had been the head of the Science Department of the Ladies College, Colombo, for several years. Morning star wishes her all success in her new post.The Senior Vice Principal has been Mr. Noel Vimalendran, who has been serving in his position during the difficult times. His service is to be commended.

## Projects Worth Rupees Ten Million in Eastern Sri Lanka

It is believed that the Sri Lanka Minister for Ports, Development, Shipping, Eastern Development and Muslim Religious Affairs initiated projects worth SL Rupees 10 million in Eastern Sri Lanka. Addalaichenai, Alankulam, Sambunagar, Oluvil, Palamunai and Sinna Palamunai villages will be developed under the proposed development projects

## The National Tamil Christian Conference

The second National Tamil Christian Conference will be held in New York, US, from the 27th of May 2003. It is expected to be attended by a large number of Christians from all over the globe. Distinguished speakers and Theologians are expected to take part in the conference. The focus of this conference is to help people to grow in their faith in diverse cultural contexts in which they live. Rev.Dr.Daniel Thiagarajah, the pastor in charge of Colombo Church will be conducting Bible studies at the conference.

## Meditation;

"Chief among chiefs,
when you stretch forth your hand,
widows are covered with festive beads
while orphans wear kente (cloth).
Humble King
Your words are precious jewels
We don't buy them, we don't beg for them
You give them to us free!
Chief of Lawyers,
To whom we bring our complaints;
You stand at court and defend the poor.
Chief of police,
A big rifle stands at your side.
Jesus! You are the greatest warrior among the soldiers.
You are the moon of the harvest month
Which give us our food.
Prisoners depend on you as
The tongue on the

***By; Mother Afua Kuma***

# இயேசுவின் உயிரெழுச்சி

- பேராயர் சாமுவேல் அமிர்தம்



ஓ மானிடர்களே
அன்பினையும் உண்மையினையும்
சிலுவையில் அறையுங்கள் அறையுங்கள்

நீதியைப் புதைத்து அதற்குக்
கல்லறை கட்டுங்கள் கட்டுங்கள்

மறைப்பதற்காகக் கல்லறையில்
முத்திரை போடுங்கள்
மறப்பதற்காகப் பார்வை இல்லாத
உங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள்
கண்களை மூடிக்கொள்ளுங்கள்

பொய்மையும் பகைமையும்
வன்முறையும் அநீதியும்
வென்றுவிட்டன என்று
கனவுகள் கண்டுகொண்டே
படுத்து உறங்குங்கள்
உண்மையைக் கொன்று விட்டோம் என
உங்கள் கனவுகளில்
மார்பு புடைக்க உலவுங்கள்

இன்னும் சற்றுநேரம்
மூன்று நாள்
மூன்றே மூன்று நாள்

அடைக்கும் கல் மூடி உருண்டு விழும்
கல்லறை அகலத் திறந்து கொள்ளும்

அன்பினை அடக்கம் செய்த
ஆடைகள் மட்டுமே சுருட்டப்படும்
ஒரு தோற்றம் காட்டிய ஆற்றலின்மை
அடக்கப்பட முடியாத அருளாற்றலாக உருண்டோடும்
நித்திய வாழ்வின் ஊற்றுகள்
கரைபுரண்டோடும்.
இது
இறைமைந்தன் இயேசுவின் உயிரெழுச்சி.

(பேராயர் சாமுவேல் அமிர்தம் தென்கேரளப் பேராயத்தின் ஓய்வுபெற்ற பேராயர். உலகறிந்த இறையியல் அறிஞர். இவ்வருங்கவிதையைத் 'தரு' வில் கண்டோம். - ஆசிரியர்)

## அனுபவ சாட்சி

## ஒளியை அறிந்து கொண்டேன்!

எனது வாழ்வில் எண்ணற்ற பொழுதுகளை - சந்தர்ப்பங்களை- நான் இருட்டில் இருப்பவனைப் போல கழித்திருக்கிறேன். இருட்டில் இருக்கும் போது எமக்கருகில் என்ன இருக்கின்றது என்பதை நாம் அறியமுடியாது. அங்கு கேட்கும் ஒவ்வொரு சிறிய சத்தத்திற்கும் நாம் பயப்படவேண்டியிருக்கும். நாம் செல்லவேண்டிய வழியை அறியமுடியாது. இப்படியான ஒரு அனுபவமாகவே எனது வாழ்க்கையில் பல வருடங்களைக் கடந்துவந்தேன்.

இந்த இருட்டான நிலையிலிருந்து மீள்வதற்கு என்ன வழி? இதைக்குறித்து நான் ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இருட்டான ஒரு அறையில் நாம் இருக்கும் போது அந்த அறையைப்பற்றியோ அங்கே என்னென்ன பொருட்கள் உள்ளன என்பது பற்றியோ எமக்கு எதுவும் தெரியாமல் இருக்கும். ஆனால் அவ்வறையில் திடீரென ஒரு பிரகாசமான மின் விளக்கு ஏற்றப்படுமானால்........ நிலைமை உடனேயே மாறிவிடும். இச்சிந்தனை என்னுள் பிறந்தபோது எனது வாழ்க்கையில் நான் தவறவிட்ட ஒளி எது எனச் சிந்தித்தேன். கடவுள் ஒளியே அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை என்ற திருவசனம் என் ஞாபகத்துக்கு வந்தது.

இதன் பின்னர் பயம், சந்தேகம், தடுமாற்றம் போன்றவை என்னை ஆட்கொண்ட ஒவ்வொரு கணத்திலும் 'கடவுளே நீரே எனக்கு வெளிச்சமாகி வழிகாட்டும்' என ஜெபிக்கத் துவங்கினேன். அவரது பிரசன்னத்தையும் வழிகாட்டுதலையும் உணரத்துவங்கினேன். அவரது ஞானமான வழிகாட்டுதலும், அவர்தரும் சமாதானமிக்க ஆறுதலும் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி கடைசியில் முழுமையாக ஆட்கொண்டுவிட்டன.

V. துஷ்யந்த்

## பஞ்சாகமங்கள்

பரிசுத்த வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களும் பஞ்சாகமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மோசேயின் நியாயப்பிரமாணங்கள் என்றும் இவைகளுக்கு ஒரு பெயர் உண்டு. ஆங்கிலத்தில் இவைகளுக்கு பென்டட்ருக் (Pentatruche) என்று பெயர். Pentatruche என்றால் ஐந்து புத்தகச்சுருள்கள் என்று பொருளாகும். இந்த 5 புத்தங்களும் யூதமக்களுக்கு மிகவும் முக்கியமான நியாயப்பிரமாணப் புத்தகங்கள் ஆகும். இந்த 5 புத்தகங்களில் ஒவ்வொரு புத்தகத்துக்கும் ஒவ்வொரு முக்கிய செய்திகள் உண்டு.

| | |
|---|---|
| ஆதியாகமம் | - ஆரம்பங்கள் |
| யாத்திராகமம் | - இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்பட்ட வரலாறு |
| லேவியராகமம் | - பரிசுத்தம். வழிபாட்டு முறைகள் |
| எண்ணாகமம் | - இஸ்ரவேலரின் பிரயாணங்கள் |
| உபாகமம் | - 10 கட்டளைகள் இரண்டாம் முறை கொடுக்கப்பட்ட வரலாறு, கீழ்ப்படிதல் |

இந்த 5 புத்தகங்களையும் எழுதியவர் மோசே இந்த 5 புத்தகங்களில் 187 அதிகாரங்கள் 269 பக்கங்களில் அடங்கி உள்ளது. ஆதியாகமம் என்ற புத்தகத்தை 21 நாட்களில் வாசித்து முடித்து விடலாம்.

## துணுக்குத் திரட்டு

* யாழ்ப்பாணத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினால் இருப்பிடம் இழந்த குடும்பங்கள் 24,178.
* அதி உயர் பாதுகாப்புவலயம் காரணமாக இராணுவ வசமாகி உள்ள நிலம் 12,259 ஏக்கர்.
* கிறிஸ்தவம் இந்தியாவின் தேசிய மார்க்கங்களில் ஒன்று. ஏனெனில் அது தோன்றிய காலத்திலிருந்தே இங்கு வேரூன்றிவிட்டது. இவ்வாறு இந்தியப் பாராளுமன்றத்திலேயே அறிவித்தவர் பண்டிதர் ஜவஹர்லால் நேரு.
* பிரான்ஸ் நாட்டில் பிரபல கொள்ளைக்காரர்கள், கொலைகாரர், சமூகவிரோதிகள் போன்றவர்களுக்கும் சிலைகள் அமைத்திருக்கிறார்கள். அச்சிலைகளின் கீழ் அவர்கள் செய்த குற்றங்களும் வழங்கப்பட்ட தண்டனைகளும் குறிக்கப்பட்டுள்ளன.
* உலகின் மிக உயரமான தேவாலயம் இஸ்ரேல் நாட்டில் டெல் அவீவ் நகரில் உள்ளது. இது 10 மாடி உயரம் கொண்டது.
* மொழிகளின் தன்மை.

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | - | வர்த்தக மொழி |
| ஜெர்மன் | - | விஞ்ஞான மொழி |
| பிரெஞ்சு | - | காதல் மொழி |
| தமிழ் | - | பக்தி மொழி |

## செய்திச்சிதறல்

### ◆ தென்னிலங்கை வெள்ள அனர்த்தம் 265 பேர் பலி.

இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் சமீபத்தில் பெய்த மழையினால் பெருமளவு வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. பலியானோரின் எண்ணிக்கை 265 என அரச வானொலி தெரிவித்தது. பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்களுக்காக வெளிநாடுகளும், உள்நாட்டு அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பெருமளவில் நிவாரண உதவிகளை வழங்கிவருகின்றன.

### இடைக்கால நிர்வாகசபை குறித்த அரசின் பதில்:-

வடகிழக்குக்கான இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற விடுதலைப்புலிகள் தரப்பின் கோரிக்கைக்கான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நோர்வே தூதரக அதிகாரிகள் கிளிநொச்சிக்கு எடுத்துச்சென்று விடுதலைப்புலிகளின் அரசியற்துறையினரிடம் கையளித்துள்ளனர்.

### சார்ஸ் நோய்க்கு மருந்து

மனிதகுலத்துக்குப் புதிய அச்சுறுத்தலாக அமைந்துவிட்ட சார்ஸ் நோய்க்கு தற்பொழுது ஊசிமூலமாகச் செலுத்தப்படக்கூடிய மருந்து ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம்மருந்தின் பயன்பாடு சுமார் 6 மாதத்தில் கிடைக்கும் என ஹொங்கொங்-சீன ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஆதியாகமம்

ஆதி என்றால் ஆரம்பம் என்று பொருள். தோற்றம், 'மூலப்பொருள்'. பிறப்பு என்ற வார்த்தைகளைக் கொண்டு ஆதி என்ற வார்த்தையின் பொருளை விளங்கலாம். கிரேக்க மொழியில் ஜெனனோ என்ற வார்த்தைக்கு பெற்றெடுத்தல் என்று பொருளாகும்.

ஆதியாகமத்தை ஆரம்பங்களின் புத்தகம் என்று அழைக்கலாம். படைப்பு, மனிதவர்க்கம், மொழிகள், கலாச்சாரம், நாகரீகம், குடும்பம், சமுதாய வாழ்க்கை, வேலை, பாவம், கொலை, துன்பம், விசுவாசம், மீட்பு, ஆசீர்வாதம், தேவனுடைய மக்களாகிய இஸ்ரவேலரின் வரலாறு என்பவைகளின் தொடக்கங்கள் ஆதியாகமத்தில் அமைந்துள்ளது.

***எழுதியவர்*** :- மோசே
***எழுதப்பட்ட காலம்*** :- கி.மு 1450 - கி.மு 1410
***இப்புத்தகத்தின் சம்பவங்கள் நிகழ்ந்த காலம்*** :-சுமார் 2350 வருடங்களில் நடைபெற்ற மாபெரும் நிகழ்ச்சிகள் இடம்பெற்று உள்ளன ! முதல் 11 அதிகாரங்கள் 2000 வருடங்களில் நிகழ்ந்தவைகளையும், 12-50 அதிகாரங்கள் 350 வருடங்களில் நிகழ்ந்தவைகளையும் எடுத்து உரைக்கின்றன.

***ஏன் எழுதப்பட்டது*** :- தேவனுடைய மகத்துவத்தையும், மீட்கும் கிருபையையும், இரட்சிப்பின் திட்டத்தையும், நாம் அறிந்து கொள்ள எழுதப்பட்டது.

***முக்கிய குறிப்பு புள்ளி விபரங்கள்*** :-

| | | | |
|---|---|---|---|
| அதிகாரங்கள் | 50 | வசனங்கள் | 1533 |
| பெரிய அதிகாரம் | 24 | வசனங்கள் | 67 |
| சிறிய அதிகாரம் | 16 | வசனங்கள் | 16 |

ஆதியாகமத்தைப்பற்றி புதிய ஏற்பாட்டில் 17 புத்தகங்களில் 60 தடவைக்கு மேல் சொல்லப்பட்டு இருக்கிறது. உடன்படிக்கையைப் பற்றி ஆதியாகமத்தில் 5 இடங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. 10 இடங்களில் வம்சவரலாறுகள் எழுதப்பட்டு இருக்கின்றன. ஆதியாகமத்தை வம்சவரலாறுகளின் புத்தகம் என்றும் அழைக்ககலாம். படைப்பின் வரலாற்றோடு ஆரம்பமாகும் இப்புத்தகம் யோசேப்பின் சடலம் அடக்கம் பண்ணப்படுவதோடு முடிவடைகிறது.

***முக்கிய கதாபாத்திரங்கள்*** :- ஆதாம், ஏவாள், காயீன், ஆபேல், நோவா, ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, ரெபெக்காள், யாக்கோபு, யோசேப்பு.
ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு என்பவர்கள் 'முற்பிதாக்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்றும் யாக்கோபின் 12 குமாரரும் கோத்திரப் பிதாக்கள் என்றும் அழைக்கப்படுகின்றார்கள்

***முக்கிய இடங்கள்***: ஏதேன் தோட்டம், அரராத் மலை, பாபேல் ஊர், ஆரான், சீகேம், எபிரோன், பெயெர்செபா, பெத்தேல், எகிப்து.

***முக்கிய செய்தி*** :- தேவன் சர்வ வல்லவர். அவருடைய படைப்பின் மாட்சிமை. தேவனால் படைக்கப்பட்ட மனிதன் பாவம் செய்கிறான். ஆசீர்வாதங்களை இழந்து போகிறான். பாவத்திற்கு திட்டவட்டமான தண்டனையும், விளைவும் உண்டு. தேவனுடைய மீட்கும் கிருபையும், இரட்சிப்பின் திட்டமும் தெளிவாக விளக்கப்பட்டு இருக்கின்றன. தேவன் தம்மைத் தெரிந்து கொண்ட மக்களின் வரலாறு. அவர்களுக்கு தேவன் அருளும் ஆசீர்வாதங்கள்.

T.றெபேக்கா, வவுனியா

உதயதாரகை 23-05-2003

தாரகை ஒளி:-

***நீ விரும்புவதைச் செய்வதன்று, நீ செய்வதை விரும்புவதுதான் இன்பத்தின் இரகசியம்.***

-ஜேம்ஸ் பார்க் (1763-1838)

**ஆசிரியத் தலையங்கம்:-**

## தேவை : அபிவிருத்தி

ஜப்பானில் நடைபெறவுள்ள 'இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம்' பற்றிய தகவல்கள் இன்று உலக அரங்கின் முக்கிய செய்தியாக இடம்பிடித்துள்ளது. புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக சபை பலவிதமான கருத்துக்களையும் ஹேஷ்யங்களையும் நாட்டின் பல பகுதிகளிலும் உலக நாடுகளிலும் உண்டாக்கி இருக்கின்றது. முன்னர் இடைக்கால நிர்வாக சபை அமைப்பதற்குத் தயாராக இருந்தோர் கூட இப்பொழுது அரசியற் சாசனத்தில் இடைக்கால நிர்வாக சபை என்று ஒன்று இல்லை எனவும் அதனால் இடைக்கால நிர்வாக சபையை அமைக்க முடியாதெனவும் கூறிவருகிறார்கள்.

ஆனால், புலிகள் இயக்கத்தினர் இடைக்கால நிர்வாக சபையைக் கோருவதன் நோக்கத்தை தெளிவாக விளக்கியுள்ளனர். ஒரு வருடமாக பேச்சளவிலும் காகிதங்களிலும் மட்டும் செயற்படும்(?) வடகிழக்கின் அபிவிருத்தியானது செயல்வடிவம் பெறவேண்டும்- குறிப்பாக உதவி வழங்கும் நாடுகளின் உதவித்தொகை கிடைக்கும்பொழுது அதன் உரிய பகுதி வடகிழக்கின் அபிவிருத்திக்கும் பயன்படவேண்டும் என்பதால் அபிவிருத்தியை நடைமுறைப்படுத்தி அதன் விளைவுகள் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கிடைக்க வேண்டுமென்பதே தமது நோக்கம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

வடகிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் துரிதகதியில் மேம்படுத்த விசேட அபிவிருத்திக் கட்டமைப்பொன்றை வழங்க அரசு முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட, வீடுகளை இழந்த, உடைமைகளை இழந்த மக்களின் நிலையையும் துயரத்தையும் துடைத்து புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம், அடிப்படை வசதிகள் போன்றவற்றை வடகிழக்கு மக்களுக்கும் வழங்கவேண்டும் என்ற சிந்தனை அனைத்துத்தரப்பு அரசியற் தலைவர்களுக்கும் உண்டாக வேண்டும்.

சமீபத்திய வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் அரச உதவிகள் விரைவாகக் கிடைத்து வருகின்றன. அது வரவேற்கத்தக்க விடயமே. ஆனால் தசாப்தங்களாக இந்நிலையை அனுபவித்துவரும் மக்களைப்பற்றியும் கொஞ்சம் யோசிக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

## சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துதல்

**(சரீரத்தையும் அதன் இச்சைகளையும் ஒடுக்குவது குறித்த ஒரு விளக்கம். தமிழ் நாட்டின் பிரபல சுவிசேஷ ஊழியரும் பத்திரிகையாளருமான டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் மேற்குநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ்கிறிஸ்தவர்களுக்காக தமது ஜாமக்காரன் இதழில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியே இது.)**

மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு **என் சரீரத்தை ஒடுக்கி கீழ்படுத்துகிறேன். (1 கொரி 9:27)** என்று பவுல் கூறுகிறதுபோல சரீரத்தை ஒடுக்கவேண்டும். அது உபவாசத்தால் தான் முடியும். உபவாசத்தால் தான் சரீரமும் அடங்கும். அதன் பிறகு சரீரத்தை கீழ்ப்படுத்தமுடியும். அதாவது நம் கட்டுப்பாட்டுக்குள் சரீரத்தை கொண்டுவர முடியும். இது என் சொந்த அனுபவம் ஆகும்.

எத்தனை வருடம் வரை இந்த முறையை கையாள வேண்டும் என்று சிலர் கேட்பார்கள். நாம் சாகும் கடைசி நிமிடம் வரை இதை தொடர வேண்டும். **சரீர உணர்ச்சி** சாகும் வரை நமக்கும் எல்லா மனுஷருக்கும் உண்டாகும்.

என்னை இந்த சோதனைகளில் தொடர்ந்து வெற்றி பெறவைத்த ஒரு ஜெபம் உண்டு. அது உங்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும் என்று இங்கு குறிப்பிடுகிறேன்.

ஒவ்வொரு நாள் காலையிலும் நம் சரீரத்தின் **ஒவ்வொரு உறுப்புகளுக்காகவும் ஜெபித்து** கர்த்தரின் பாதுகாப்பை பெற வேண்டும்.

தாவீது கூறுகிறான்: ஆண்டவரே என் **வாய்க்கு காவல் வையும்.** என் **இருதயத்தை** துன்மார்க்கத்துக்கு **இணங்க வொட்டாதேயும்,** (சங்கீதம் 141:3,4)

தாவீதின் மகன் **சாலமோனும்** தான் எழுதிய நீதிமொழிகளில் (4:23) எல்லா **காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள்** என்று கூறுகிறார்.

கர்த்தர் நம் உடலின் ஒவ்வொரு உறுப்புகளுக்கும் **கட்டுப்பாடு** அளித்து காத்துக்கொள்வார்.

**கண்:** முதலாவது ஒவ்வொரு நாள் காலையிலும் என் **கண்களுக்காக** ஜெபிப்பேன். நம் முழு உறுப்புகளையும் பாவத்துக்குள்ளாக்குவது இந்த கண் கொண்டுதான். அதன் விளைவால் சரீரமும் பாதிக்கப்படும்.

**இருதயத்தின் வாசல் கண்** என்று எழுதியிருக்கிறது. இந்த கண் வழியாக எதையெல்லாம் பார்க்கிறாயோ அது மனதையும் பாதிக்கும். அதன் விளைவால் சரீரமும் பாதிக்கப்படும்.

கர்த்தாவே இந்தப் பகல் முழுவதும் இந்த கண்களால் நான் பாவ காரியங்களை பார்க்கக்கூடாது. ஒருவேளை பார்க்க நேர்ந்தாலும் உடனே என் பார்வையை கட்டுப்படுத்த எனக்கு பெலன் வேண்டும். உள்ளத்தின் உணர்ச்சிகளை கிளறும் எந்த புஸ்தகத்தையோ, சினிமா போஸ்டரையோ பார்க்கக்கூடாது என்று ஜெபித்து சென்றாலும் தெருவில் ஒட்டப்பட்டுள்ள சுவர் படங்களை நாம் காணநேரும் என்றாலும் நாம் காலையில் கண்ணின் காவலுக்காக ஜெபித்து பெலத்தை பெற்றுக் கொண்டால் அந்த படங்களை நாம் பார்த்தாலும் அது நம்மை, நம் மனதை பாதிப்பதில்லை.

அசந்தர்ப்பமாய் கண்ணில் ஒரு ஆபாச காட்சி அல்லது உள்ளத்தை கிளரும் படம்பார்க்க நேருவது தவறல்ல. அதையே உற்றுப்பார்த்து ரசிப்பதில் தான் தவறு கர்ப்பம் தரிக்கிறது.

**கால்கள்:** இரண்டாவது என் கால்களுக்காக ஜெபிப்பேன். உமக்கு பிரியமில்லாத எந்த இடத்துக்கும் அல்லது சோதனை உள்ள எந்த வீட்டுக்கும் நான் செல்லக்கூடாது. என் கால்களுக்கு ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்று ஜெபிக்கவேண்டும்.

**எந்த இடத்தில் உனக்கு சோதனை உண்டோ அந்த வீட்டுக்கு அல்லது அந்த இடத்துக்கு அடிக்கடி போகாதே. சோதனைக்குரிய நபரை சந்திக்க** பிரியப்படாதே. அது விசுவாசியானாலும், திருமணமானவர்களானாலும், திருமணம் ஆகாதவர்களானாலும் எச்சரிக்கையாக இரு. உன் ஆத்துமாவைக் காத்துக்கொள். பிசாசு உன்னை சோதிக்க முயலுவான். எச்சரிக்கையாக இரு!

ஊழியம் செய்யச் செல்வதுபோல உன் உள்ளம் சில சமயங்களில் உன்னை திருப்திப்படுத்தி, உன்னை விழத்தள்ளும் இடங்களுக்கு உன் கால்கள் மூலம் உன்னை அழைத்து செல்லும். அதனால் கால்களுக்கு ஒரு பரிசுத்த கட்டுப்பாடு தேவை.

**இருதயம்:** மூன்றாவது நான் என் இருதய சிந்தனைகளுக்காக ஜெபிப்பேன்.

**என் இருதயத்தில் அக்கிரம சிந்தைகொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்கு செவி கொடார்.** (சங் 66:18.) பெரும்பாலானவர்கள் கிரியைகளில் அல்லது செய்கைகளில் வெளியரங்கமாக பாவம் செய்வதில்லை. ஆனால் **மனதிலே, கற்பனையிலே, சிந்தனையிலே** பாவம் செய்கிறார்கள். அப்படி சிந்தனையில் செய்யும் பாவம் வெளியே தெரியாது. அதனால் சரீரத்திலே ஒடுங்கிபோகிறார்கள். **"சிந்தனைகளினாலே வீணரானார்கள்"** (ரோமர் 1:21) என்று வேதம் கூறுகிறது. சிந்தனை மிகவும் ஆபத்தானது. அதன் ஆபத்து பலருக்கு புரிவதில்லை.

இந்த இருதய சிந்தனை நம்மை அதிகமாக தாக்கும் நேரம் இரவு படுக்கையின் போதுதான். அப்போதுதான் நீ அதிகம் யோசிக்கிறாய்.

தவறான யோசனைகளை தவிர்க்க தாவீதுகூறும் யோசனைகளை கேளுங்கள். **"உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் (கர்த்தரோடு) பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்".** (சங் 4:4) மூன்றாவது வசனத்தில் கர்த்தரோடு ஜெபம் செய்தால் அதை அவர் கேட்பார் என்று தாவீது கூறி பிறகு படுக்கையிலும் தூக்கம் வரும்வரை கர்த்தரோடு பேசிக்கொண்டிருங்கள் என்று ஆலோசனை கூறுகிறார். அப்படி **கர்த்தரோடு** பேசிக்கொண்டிருக்கும்போது வேறு சிந்தனைக்கு இடம் உண்டாகாது. உன் தூக்கத்தில் கெட்ட சொப்பனம் வராது அமைதியாக பரிசுத்தமாக தூங்கிவிடுவாய்.

இப்படித்தான் நான் ஒவ்வொரு நாள் காலை ஜெபத்திலும் ஒவ்வொரு உறுப்புக்கும் ஜெபம் செய்து கர்த்தரின் காவலை பெற்றுக்கொள்வேன்.

இரவு வரும்போது காலை நான் செய்த ஜெபத்தை மறுபடியும் யோசிப்பேன். ஜெபித்த உறுப்புகளில் காவலையும் மீறி தவறு ஏதும் நடந்ததா என்று ஒரு நிமிடம் ஆராய்ந்து பார்த்து தவறு நடந்திருந்தால் அந்த இரவே கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டு அப்போதே மன்னிப்பையும் பெற்று அதே தவறு அடுத்த நாள் அந்த உறுப்பில் உண்டாகாதபடி இருக்க ஒரு தீர்மானமும் எடுத்துக்கொள்வேன். இந்த ஜெப ஒழுங்கை இப்போதும் செய்து கொண்டிருக்கிறேன்.

இந்தவிதமான பாதுகாப்புகளை நான் தொடர்ந்து ஏற்படுத்திக் கொள்வதால்தான் இன்றும் கர்த்தருடைய கிருபையோடு ஊழியத்தை தொடருகிறேன்.

எனக்கு உண்டான அதே சோதனை எல்லாருக்கும் உண்டாக நியாயமில்லை. அவரவர்களின் தொழில்கள், வேலைஸ்தலங்கள், கல்லூரி ஸ்தலங்கள் இவைகளை அனுசரித்துதான் அந்தந்த சூழ்நிலைக்கேற்ப சோதனைகள் வரும்.



## ஊழியர்கள்

**கடவுள் தமமுடைய ஊழியத்துக்காக முன்குறிக்கப்பட்டவர்களை மட்டுமே அழைக்கிறார். தமது தீர்க்கதரிசனப் பணிக்காக எரேமியாவை அழைத்தபொழுது 'நான் உன்னை தாயின் வயிற்றில் நீ உருவாகுமுன்னே அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்.' என்கிறார் (எரே.1:5) எரேமியா தான் தகுதியற்றவன் என்று கூறியபோது கடவுள் அவனைத் தகுதிப்படுத்திப் பயன்படுத்துகிறார். (வசனங்கள் 6,7) இதே போன்ற ஒரு நிலையை மோசேயைக் கடவுள் அழைத்த போதும் காண்கிறோம். தான் வாக்குவல்லவனல்லன். திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என மோசே கூறியபோதும் கடவுள் அவனைத் தகுதியுள்ளவனாக்கினார்.**

**ஊழியக்காரர் இயேசு தமது சுய இரத்தத்தினாலே சம்பாதிக்கப்பட்ட மந்தையாகிய விசுவாசிகளாகிய சபையை உபதேசித்து, சத்தியத்தில் நடத்த அவர்களுக்காக ஜெபிக்க, பரிசுத்த ஆவியானவரால் நியமிக்கப்பட்டவர்கள் (அப் 20:28).**

**ஊழியம் என்பது சிலுவையின் பாதை. கஷ்டங்கள், கண்ணீர், பிரசினைகள், வேதனைகள் ஊழியப் பாதையில் வரும். ஆகையால் ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத்தானாய் ஏற்படுகிறதில்லை (எபி. 5:4).**

**ஊழியம் செய்கிறவர்கள் வேதவசனத்தை முகதாட்சண்ணியமில்லாமல் சத்தியத்தைச் சத்தியமாகவே சொல்ல வேண்டும்.** ***சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாகத் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி கடிந்து கொண்டு புத்திசொல்லு. (2தீமோ 4:2)*** **.0**

EDITORIAL

# A New Model of Spirituality

One of the common features of human kind is the drive to aliveness in life. Some choose to be active in life to be alive, while others choose to be contemplative and dedicate the time in quiet going undisturbed life, to achieve the aliveness or in other words the peace of mind. Parker Palmer, in his book entitled 'the Active Life' says that our drive to aliveness expresses itself in two elemental and inseparable ways: action and contemplation. The norm or the usual pattern of action and contemplation seem to be the two opposites. This reflects the culture of either/or. Action flies off into frenzy-a frantic and even violent effort to impose one's will on the world, or at least to survive against the odds. Contemplation flies off into escapism- a flight from the world into a realm of false bliss.

The relation of these paradoxical parts of our lives takes us from separation through alternation and sometimes to integration, says Palmer. Separation makes us choose either the active method or contemplative method, which may result in over action, which intern brings burnout, stress or mess in our lives or the system in which we are involved. The second aspect of alternation may look better, as action is replaced by contemplation and otherwise. But they both remain two separate poles, and are never brought together. But in the stage of integration, both contemplation and action are so intertwined that features we associate with one are always found at the heart of the other. A classic example is the Chinese symbol of yang harbours a dark spot of yin, and the symbol of yin, a light spot of yang.

These two aspects, which are essential to be fully alive, can be seen in the life of Jesus Christ. He was a man of actions all his life. His ministry to the marginalized, his works and actions directed towards elevating human suffering and his identification with the oppressed community reveal this aspect of Jesus. His call to his disciples at the seaside, "follow me, I will make you fishers of men" itself points to the active life style of his ministry. Healing the sick, accepting the people who have been branded as sinners by the religious community, and healing the mentally sick, show his action has been directed towards the physical mental and sociological well being of human kind at large. 'Action like a sacrament is the visible form of an invisible spirit, an outward manifestation of an inward power', is seen in the life of the Son of God.

Contemplation on the other hand, does not mean just the practice of a particular technique, like sitting in the lotus position and chanting a prayer. What is meant by contemplation is that it helps us to unveil the illusions that masquerade as reality and reveal the reality behind the masks. This manifestation is possible only with the inspiration induced by the solitude. This aspect is seen in Jesus' life as he spent the moments alone in the desert, the sleepless nights to pray to God, and the time he spent at the garden of Gethsemane before his trial and crucifixion.

The scenario of Jesus' time not only reflects the positive side of the combination of action and contemplation of Jesus, but also the distorted notion of this combination as well. His contemporaries the Pharisees, Sadducees, and the religious authorities also in a way lived a life of action and contemplation. But they were either alteration or integration as mentioned earlier. The importance given to actions like fasting, alms giving, and praying several times according to the laws and the Torah, resulted in nothing but, pride, and self righteousness. Because their action-contemplation had a hidden agenda of selfishness. The woe sayings reveal the harm they did to the community, especially to the widows and the poor. The actions of them went to the extreme of plotting against Jesus and crucifying him. The problem has been the motive behind the action-contemplation life of his contemporaries. Their intention was too selfish that the presence of Jesus became a threat to them that their actions went to the extreme of trying to eliminate the one whose action-contemplation was 'other centered', and unselfishness.

The world around us is the 'world of action'. The majority of people play the role being active most of their life. Some of them take up the role of contemplative action, thus alienating themselves from the reality. Any action of social justice, and 'helping the poor', are based mostly on the action-action method. Thus, they are prone to be missing the better half of action, which is the contemplation. The dichotomy is seen even in the churches today. The churches which forcus on the contemplative-action, spend time in fasting and praying most of the tme, giving importance to the 'entering into heaven' after death, forgetting the reality 'here and now'. The main thrust of Jesus' action contemplation' model is to establish the Reign of God in this world today.

We are called upon to internalize this truth, that action-contemplation model is the example set before us to create aliveness not only to our own lives, but also to the systems in which we are involved in, whether they secular or religious. This model will provide the aliveness to all walks of life. This action-contemplation model, if articulated in the correct motive, will become a bracingly vital, down-to-earth spirituality for persons who live busy, active lives-at home or world, in the arts or politics, serving others or working for social change

"Integrating contemplation with action,<br>is a kind of spirituality<br>that takes us down and into the vitality<br>and wisdom of our own experience,<br>into the deep places<br>where self and world and spirit intersect<br>and transformation can begin."

T.T

## The Heavenly Visitation

Sometimes, I have been visited
By those whom we call Angels!
Many a time they aren't obvious
As they perform their heavenly actions.

Neither clothed with the startling ligh
Nor with the hallow so bright,
They appear in the darkest night,
As human beings at your sight.

Help to the needy, is all they intend,
Crisis, is the matter they attend
Innocents are those whom they defend,
And on God's grace they solely depend.

Sincerity and concern sound in their voices
They opt for justice, as their choice
Even when falter, they help to rise
They can never indulge in any li

Just a few of this kind still exist
Who sacrifice their lives for purposes like these
They can be expected in the darkest moments
The sincere helpers, the huma

'Judith'

Greek heritage and Syrophoenician by birth. She is, in short, of the wrong sex, the wrong nationality, the wrong ethnicity, and th wrong racial/religious; background (Syrohoenician-to Jews a racial term with unsavory religious connotations). She is aprantly a single parent pwith a daughter, which, in itself was viewed as a liability for daughters needed dowries and more than that, this daughter is said to be demon-possessed.

Like the woman with the flow of blood, Mark introduces her without male connections, and like that woman she throws herself at Jesus' feet, approaching in faith, this time with; an altruistic request on behalf of her daughter. However, this woman approaches Jesus in a house, a more customary setting for reputable women than on the street in public. It has to be noted that this account follows a section of food taboos. If we take for granted that Jesus is at the table, then this story hearkens back to the preceding one on food taboos in Mark 7. 1-23 and serves to show the 'widened table fellowship' among the followers of Jesus!

Jesus' response to this woman in v. 27 is one of the most troubling Christ logical verses in the Synoptic Gospels. It reflects the contempt of the Jews for "heathens" and depicts Jesus as thoroughly racist and uncaring figure. It is particularly troubling since Jesus has already healed an "outsider," the demonic from Decapoils (5. 1-20). It looks as if Jesus responds sharply, circumscribed by his own background, but she persists in her approach, replying with equal quickness, and candor first, by agreeing with Jesus and addressing him as "Lord" the only time he is so addressed in Mark, and then by pointing out that when children (Jews) are fed, dogs (gentiles) get the left-over. Jesus has taught that custom should not stand in the way of helping those in need. Jesus, perhaps remembering his own words, recognizing the accuracy and wisdom of her response and effects a long-distance healing by freeing her daughter from the demon. Apparently, rather than finding his ego bruised, Jesus is won over by the persistence, wit, and intelligence of a Gentile woman. In fact, it is she who restores Jesus to his proper attitude!

It is clear that Mark wants to contrast the way the religious authorities have come to Jesus with the way the woman has. They come with a closed and legalistic attitude, where asd she comes empty-handed and without merit, but open to Jersus. She is rewarded as Jesus shatters the wall between Jew and Gentile in granting her request for her daughter. Thus, while Markan community probably preserved the story as part of its attempt to comprehend the Gentile mission of the church and the relation between Jews and Gentiles therein, the point is that the woman did not hesitate to approach Jesus and he did not hesitate to learn from her. What Sharon Ringe says is noteworthy in this context:

*'The woman ministers to Jesus, first, by witnessing to his ability as a worker of miracles and, second by engaging with him in a way that allows him to move beyond taboos and boundaries'.*

Another interpretation of Jesus' response of mentioning the Gentiles as 'Dogs' by some other theologians is that among the Jews the saying of 'Do not share the bread with the dogs' was quite popular. Jews always had the dogs outside the house and never allowed them to be treated as pets on the laps like the Gentiles did. So, the conversation between Jesus and this woman could have been the exchange of words based on the old sayings of the Jews, the response of the woman naturally an act of revealing a hidden lesson that all people be treated equally by Jesus.

'Sophia'

*Affectionateness and birth in a good family,these two constitute what is called a proper behavior to all* *(Kural992)*